தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ரவி குமார் தியோடர், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (விரிவாக்கம்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 26-4-2012

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மே 2012 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள்

தமிழ்நாட்டில் பரவலாக நடத்தப்பட்ட பூச்சி, நோய் ஆய்வின்படி கீழ்க்கண்ட முன்னறிவிப்பினை இப்பல்கலைக்கழகத்தின் பயிர்ப் பாதுகாப்பு மையம் செய்கின்றது:

பொதுவாக பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு குறைவாகவே காணப்படுகின்றன. ஆதலால், விவசாயிகள் தங்கள் பயிர்களில் விளக்குப் பொறி அமைத்து பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும்.

**நெல்**

சொர்ணவாரி மற்றும் கார் முன்பருவ நெல் பயிரிடும் விவசாயிகள் கவனத்திற்கு:

இலைப்பேன், இலைச்சுருட்டுப்புழு, நெல் கூட்டுப்புழு மற்றும் தத்துப்பூச்சிகளின் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. நோயினைப் பொறுத்தவரை இலைப்புள்ளி நோய் தென்பட வாய்ப்புள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றது.

**அ) ஈர விதை நேர்த்தி:**

1. ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டசிம் அல்லது சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸ் 10 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு இரவு முழுவதும் ஊற வைக்கவும்.
2. நெல்லை நாற்றங்காலிலிருந்து பிடுங்குவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு 20 சென்ட் நாற்றாங்காலுக்கு 1.5 கிலோ சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸ் மற்றும் 30 கிலோ தொழு உரம் இடவும்.

(அல்லது)

3. நெல் நாற்றுக்கள் வேர் நனைத்தல்:

   நெல் வயலின் ஒரு ஓரமாக 25 சதுர மீட்டர் அளவு தேர்ந்தெடுத்து அதில் 2.5 செ.மீ தண்ணீர் தேக்கி 2.5 கிலோ சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸைக் கரைக்கவும். இதில் 20 சென்ட் நாற்றங்கால் பயிரினை நடவுக்கு முன்பு 30 நிமிடம் ஊற வைத்து நடவு செய்யவும்.

**நாற்றங்காலில் பூச்சி மேலாண்மை**

1. அடி உரமாக வேப்பம் பிண்ணாக்கு 12.5 கிலோ 20 சென்ட் நாற்றங்காலுக்கு இடவும்.
2. விளக்குப் பொறிகளை அமைத்து அந்திப் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும்.
3. பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைச் சாறு 5% தயாரித்து (ஒட்டும் திரவம் 1 லி கரைசலுக்கு 5 மி.லி உடன்) பயிர்களில் தெளிக்கவும்.
4. பூச்சிகளின் நடமாட்டம் அதிகம் காணப்படின் குளோர்பைரிஃபாஸ் 20 EC - 80 மிலி/ 20 சென்ட் நாற்றங்காலுக்குத் தெளிக்கவும்.

**பப்பாளி மாவுப்பூச்சி கட்டுப்பாடு**

மரவள்ளி, பப்பாளி மற்றும் மல்பெரி பயிர்களிலுள்ள மாவுப்பூச்சியின் தாக்குதலை ஒட்டுண்ணிகளின் மூலம் கட்டுப்படுத்தலாம். இதற்காக அருகிலுள்ள வேளாண் பல்கலைக்கழகத்தின் கல்லூரி, வேளாண் ஆராய்ச்சி நிலையம் அல்லது வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி ஒட்டுண்ணிகளை இலவசமாகப் பெற்று மாவுப்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.

மேலும், விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள:

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வேளாண் பூச்சியியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611214

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயிர் நோயியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611226

மக்கள் தொடர்பு அலுவலர்